**ALAGAPPA UNIVERSITY**
(Reaccredited with 'A' Grade by NAAC)
**KARAIKUDI**

---

Date : 22.2.2017

The Placement Cell of Alagappa University organised a Campus Placement Drive on 04.01.2017. Axis Bank, Integrated Enterprises (India) Ltd and Solaimalai Enterprises participated in the drive and conducted the recruitment process for the position of Business Development Executive, Relationship Manager and Sales/Logistics Executives. 254 students from various Departments of Alagappa University and Affiliated Colleges attended the recruitment drive. Veveaham Educational Institutions also took part in the drive for recruiting PG Assistants and Hostel Study Masters; 30 students were registered.



The drive assumed significance as 53 students were selected. 2 students of the University were chosen as Business Development Executive in Axis Bank; 36 students of the University and 2 students from other colleges are selected as Relationship Manager by Integrated Enterprises (India) Ltd. The monthly salary for these positions is Rs. 12,000 plus incentives

Veveaham School selected 2 PG Assistants (1 each from the University and other college) with a monthly salary of Rs. 35,000/-. It has also chosen 11 Study Masters 6 from the University and 5 from other colleges with a monthly salary of Rs. 15,000/-

Appointment orders were issued to the successful students by Vice-Chancellor Prof. S. Subbiah in the presence of Dr. V. Balachandran, Registrar i/c., Alagappa University, Thiru. S.

Selvakumar, Vice-President, Integrated Enterprises India Ltd and Thiru. M. Shahul Hameed, Assistant Vice President, Axis Bank on 20.02.2017.



The next Placement Drive anchored by the Placement Cell will be held on 28th February 2017 Winners Education (P) Ltd will be the recruiter for the position of Soft Skills Trainer. All B.A/M.A English Final year students are eligible to attend the drive. Number of vacancies ranges between 80 and 130. Details have been uploaded in the University website: www.alagappauniversity.ac.in

Prof. V. Balachandran
Registrar i/c.

## அழகப்பா பல்கலைக்கழகம், காரைக்குடி

(தேசிய தர நிர்ணயக் குழுவின் மறு தர மதிப்பீட்டிலும் "ஏ"தகுதி பெற்றது)

நாள் : 22.2.2017

காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழக பணியமர்த்தல் மையத்தின் சார்பில் வேலைவாய்ப்பு முகாம் கடந்த 4.1.2017 அன்று நடைபெற்றது.



இந்த முகாமில் **ஆக்ஸிஸ் வங்கியின் வணிக வளர்ச்சி நிர்வாகி பதவிக்கும், இன்டகிரேடட் என்டர்பிரைசஸ் (இந்தியா) லிமிடெட் தொடர்பு மேலாளர் (முதலீடு மற்றும் சந்தை) பதவிக்கும், சோலைமலை என்டர்பிரைசஸ் விநியோகஸ்தர் (விற்பனை/லாஜிஸ்டிக்ஸ் /தொழில்நுட்பம்) நிர்வாகிகள் பதவிக்கும் மற்றும் விவேகம் கல்வி நிறுவனம் முதுகலை ஆசிரியர் (அறிவியல் பாடப் பிரிவுகள்) பணிக்கும்** எழுத்துத் தேர்வு மற்றும் நேர்முகத் தேர்வு நடைபெற்றது.

இந்த வேலைவாய்ப்பு முகாமில் பல்கலைக்கழகத்தின் பல்வேறு துறைகள் மற்றும் இணைவுக் கல்லூரிகளிலிருந்து மொத்தம் 287 மாணவர்கள் பங்கேற்றனர். இவர்களில் 53 மாணவர்கள் மேற்குறிப்பிட்ட பதவிகளுக்கு தேர்வு செய்யப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த 53 மாணவர்களில், ஆக்ஸிஸ் வங்கியின் வணிக வளர்ச்சி நிர்வாகி பதவிக்கு பல்கலைக்கழகத்தில் இறுதி ஆண்டுபயிலும் 2 மாணவர்களும், இன்டகிரேடட் என்டர்பிரைசஸ் (இந்தியா) லிமிடெட் தொடர்பு மேலாளர் (முதலீடு மற்றும் சந்தை) பதவிக்கு 36 பல்கலைக்கழக மாணவர்களும், 2 இணைவுக் கல்லூரி மாணவர்களும் தேர்வு செய்யப்பட்டனர். விவேகம் கல்வி நிறுவன முதுகலை ஆசிரியர் (அறிவியல் பாடப் பிரிவுகள்) பணிக்கு பல்கலைக்கழகம் மற்றும் இணைவுக் கல்லூரிகள் சார்ந்த 2 மாணவர்கள் தேர்வு செய்யப்பட்டனர். மேலும், அதே நிறுவனத்தின் விடுதி கல்வி பயிற்றுநர் பணிக்கு பல்கலைக்கழகம் மற்றும் இணைவுக் கல்லூரிகள் சார்ந்த 11 மாணவர்கள் தேர்வு செய்யப்பட்டனர்.

வேலைவாய்ப்பு முகாமில் கலந்துகொண்டு, தேர்வு செய்யப்பட்ட 53 மாணவர்களுக்கு, பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேரா. சொ. சுப்பையா அவர்கள் பணிநியமன ஆணையை 20.2.2017 அன்று நேரில் வழங்கினார். இந்த விழாவில், ஆக்ஸிஸ் வங்கியின் உதவி துணைத்

தலைவர் திரு. எம். ஷாகுல் ஹமீத் அவர்களும், இன்டகிரேடட் என்டர்பிரைசஸ் (இந்தியா) லிமிடெட்டின் துணைத் தலைவர் திரு. எஸ்.செல்வக்குமார் அவர்களும் பங்கேற்றனர். பல்கலைக்கழக பதிவாளர் (பொ.) முனைவர் வி. பாலச்சந்திரன் மற்றும் பணியமர்த்தல் மையத்தின் ஒருங்கிணைப்பாளர் முனைவர் கா. உதயசூரியன் ஆகியோரும் உடன் இருந்தனர்.

அழகப்பா பல்கலைக்கழத்தின் பணியமர்த்தல் மையத்தின் சார்பாக வருகின்ற 28-2-2017 அன்று வின்னர்ஸ் எஜீகேசன் (பி) லிமிடெட் நிறுவனத்திற்கு மென்திறனாளர் பதவிக்கு (80 முதல் 130 காலியிடங்கள்) இளங்கலை மற்றும் முதுகலை ஆங்கிலம் இறுதி ஆண்டு பயிலும் மாணவர்களுக்கு வேலைவாய்ப்பு முகாம் பல்கலைக்கழக பட்டமளிப்பு விழா கலையரங்கில் நடைபெற உள்ளது.



இந்த வேலைவாய்ப்பு முகாம் பற்றிய முழு விவரங்களும் பல்கலைக்கழக இணையத்தளத்தில் www.alagappauniversity.ac.in பதிவிறக்கம் செய்துகொள்ளலாம். மேலும் கூடுதல் விவரங்களுக்கு, 04565 – 223 106 என்ற தொலைபேசியிலோ அல்லது 94425 35300 என்ற அலைபேசியிலோ தொடர்பு கொள்ளலாம் என பல்கலைக்கழகப் பதிவாளர் (பொ.) பேரா.வி. பாலச்சந்திரன் அறிவிக்கிறார்.

பேரா.வி. பாலச்சந்திரன்
பதிவாளர் (பொ.)